# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




“அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ அவரை வைத்த இடம்” (மாற்கு 16:6**b**)

**மன்னா – 10** ஏப்ரல் 2020 **பிரதி – 1**



# ஆயர் மடல்



சிலுவை வழி மீட்பை தந்து உயிர்த்தெழுதல் வழி நிலைவாழ்வை தந்த இறை இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

நமது திருச்சபையின் பாலைவன மன்னா வார இதழ் 9 ஆண்டுகளை நிறைவுசெய்து 10-வது வயதில் காலடி வைக்கிறது. திருச்சபை சார்ந்த நிகழ்வுகள், அறிவிப்புகள், அருளுரைகள், திருமறைக் கேள்விகள், கணக்குகள் என பலநிலைகளில் நமக்கு ஆன்மீக வாழ்வுக்கு துணைநிற்கும் மாத இதழுக்காகவும், அதை சிரமம் பார்க்காமல் உருவாக்கம் செய்யும் இறையன்பர்களுக்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

அகில உலக நாடுகளையும் ஆட்டம் காண வைத்துக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கம் நீங்கும்படியாக அதிகமாக ஜெபித்துக்கொள்வோம். “ஆபத்துக் காலத்திலே என்னை நோக்கி கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்” சங்கீதம் 55:15-ன் படி நாம் இணைந்து ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டு விடுதலைக்காக வேண்டுவோம்.

ஆலயத்தின் கதவுகள் அடைக்கப்பட்டு ஆராதனைகள் நடைபெறாத நிலையிலும், இணையதளம் வழியாக ஆண்டவரைத் தொழுதுகொள்ள கர்த்தர் நமக்கு வழிவகை செய்திருக்கிறார். ஆண்டவரைப் போற்றுவோம். திருச்சபை தொழுகைகள் தொடரவும், இறைமக்களாக ஆண்டவரைத் தொழுதுகொள்ளவும், ஆண்டவர் வழிவாசலை திறக்க கருத்தாய் ஜெபித்துக்கொள்வோம்.

திருச்சபைக் குடும்பங்கள் பத்திரமாய் காக்கப்படவும், வேலையிழப்புகள், சம்பள இழப்புகள் ஏற்படாவண்ணம் ஆண்டவரால் நடத்தப்படவும், கொடிய வியாதிகள், வறுமை, பட்டினி இவைகள் அண்டாது கர்த்தருடைய செட்டையின் நிழலால் மறைக்கப்படவும் தவறாது ஜெபித்துக்கொள்வோம்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு நம்மோடு இருந்து உயர்வான அடைக்கலத்தை இம்மாதம் முழுவதும் நம் வாழ்வில் தந்து வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## இன்றும் என்றும் ஜீவிக்கிறார்

"அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ அவரை வைத்த இடம்" (மாற்கு 16:6)



- மூன்று மனிதர்கள் மற்றவர்களுக்கு விரோதமாக குற்றம் செய்தார்கள் என்று விசாரிக்கப்பட்டார்கள். இருவர் தவறு செய்திருந்தனர். ஒருவர் எந்த தவறும் செய்யவில்லை.
- மூன்று பேரும் அரசாங்கத்தால் விசாரிக்கப்பட்டனர். இருவருக்கு அவர்கள் செய்த குற்றத்திற்கு சரியான தண்டனை விதிக்கப்பட்டது. ஒருவருக்கு சரியான தீர்ப்பு வழங்கப்படவில்லை.
- மூன்று பேருக்கும் சிலுவை சுமக்க கொடுக்கப்பட்டது. இருவர் அதை சுமக்கும்படி தவறு செய்திருந்தனர். ஒருவர் அதை சுமக்கும் அளவு எந்த தவறும் செய்யவில்லை.
- மூன்று பேரையும் கிண்டல்செய்து அவர்கள்மேல் துப்பினர். இருவர் திரும்ப திட்டி சபித்து அவர்கள்மேல் திரும்ப துப்பினர். ஒருவர் அமைதியாக எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார்.
- மூன்று பேரையும் சிலுவையில் ஆணிகளால் அறைந்தார்கள். இருவர் அதற்கு பாத்திரராயிருந்தார்கள். ஒருவர் அதற்கு எந்தவிதத்திலும் பாத்திரராயிருக்கவில்லை.
- மூன்றுபேரும் சிலுவையில் தொங்கும்போது பேசினர். இருவர் வாக்குவாதம் செய்தனர். ஒருவர் அப்படி வாக்குவாதம் செய்யவில்லை.
- மூன்றுபேரும் மரணம் வரும் என்று நிச்சயித்திருந்தனர். இருவர் அதை எதிர்த்தார்கள். ஒருவர் எதிர்க்கவில்லை.
- மூவரும் சிலுவையில் மரித்தார்கள். மூன்று நாட்கள் கழித்து இருவருடைய கல்லறைகளில் அவர்களுடைய உடல் இருந்தது. ஒருவருடைய உடல் அங்கே இல்லை. அவர் உயிர்த்தெழுந்தார்; ஆமென் அல்லேலூயா!

உலகத்திலே வந்த எந்த மனிதனிலும், மனிதனாய் உலகத்தில் வந்து அவதரித்த தெய்வமாகிய கிறிஸ்துவே மரித்து உயிர்த்தெழுந்து இன்னும் ஜீவிக்கிறவராக இருக்கிறார். அவர் ஜீவிப்பதால் நாம் ஜீவிக்கிறோம். அவர் ஜீவிப்பதால் நாளையத்தினம் குறித்து கவலையோ பயமோ நமக்கு இல்லை. ஏனென்றால் நம்முடைய எதிர்காலமும், நம்முடைய வாழ்க்கையும் அவருடைய கரத்தில் இருக்கிறது. அதனால் நாம் வாழுகின்ற வாழ்க்கைக்கும் பிரயோஜனமுண்டு. நாம் நமக்கு வருகிற எந்த பிரச்சனைகளைக் குறித்தும் கலங்கி தவிக்கவேண்டிய அவசியமில்லை. நம்முடைய வாழ்க்கை அவருடைய கரத்தில் இருப்பதால் அவர் அந்த பிரச்சனைகளுக்கு தீர்வை நமக்குத் தருவார். நாம் விசுவாசத்தோடு அவரிடம் கேட்கவேண்டும். அப்போது அவர் நமக்கு நன்மையாய் எல்லாவற்றையும் மாற்றித் தருவார். அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புக்கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28). இந்த சத்தியம் நம் உள்ளத்தில் ஆழமாக பதிந்துவிட்டால்போதும். நம்மை எதுவும் யாரும் அசைக்கமுடியாது.

## சிலுவையில் அறையப்பட்ட இயேசு :-

“அவர் நமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்” (எபிரெயர் 12:2).

அருள்நாதர் இயேசுகிறிஸ்து நம்மை மீட்க வந்தது பொறுப்பை சந்தோஷத்தோடு ஏற்று சிலுவை அவமானத்தை சகித்து சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் இருப்பதோடு நமக்கும் நித்திய வாழ்வைத் தந்திருக்கிறார் என்பதுதான் நாம் உணர்ந்துகொள்ளவேண்டிய உண்மை.

## உயிர்த்தெழுந்த இயேசு :-

பயம், வியாதி, துன்பம், இழப்பு, வேதனை, சோர்பு, இயலாமை இவைகளில் உயிர்த்தெழுந்த இயேசுவின் ஆற்றல் உணரப்படவேண்டிய ஒன்று.

பயத்தோடும், நடுக்கத்தோடும், இழப்பினால் வந்த வேதனையோடும் கல்லறையைக் காண வந்தவர்கள்தான் மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவர்களும். ஆனால் பயப்படாதிருங்கள் என்னும் செய்தியோடு அவர்களுக்கு கிடைத்த நம்பிக்கையூட்டும் செய்திதான்,

“அவர் உயிர்த்தெழுந்தார் இங்கேயில்லை”

சரீரத்தை காண வந்தவர்களை சாட்சியாய் மாற்றியது இந்த வார்த்தை.

சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிடும்படி வந்தவர்களை சரீர உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைத் தந்தது சர்வ வல்லவரின் ஆற்றலை அறியச் செய்த உயிர்த்தெழுதல்.

கொடிய வைரஸ் கொன்றுவிடுமோ, வியாதி, பயம், வேதனை, இயலாமை, நோய்க்கு மருந்து இல்லை, போதிய தடுப்புகள் இல்லை, குடும்பம் பிள்ளைகளைக் குறித்த கவலை, இவைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவே சிலுவை நாதர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்.

இன்று நாம் உயிர்த்தெழுந்த இயேசுவை தேடுவோம். உயிர்த்தெழுந்த இயேசுவைத் தரிசிப்போம். உயிர்த்தெழுந்த இயேசுவின் ஆற்றலை உணர்ந்து அவரோடு மகிழ்வாய் உலகில்வாழ அனைத்து ஆற்றலையும், அருளையும் தந்து வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

### உழைப்பாளியாய் முதலாளி



ஒரு பணக்காரர் சுற்றுலாப் பயணமாக வந்தபோது, காட்டை ஒட்டி இருந்த ஒரு தனியார்த் தோட்டத்தைப் பார்த்தார். அது மிகவும் அழகாகவும், அடர்த்தியாகவும் இருந்தது. பார்த்த உடனேயே அதற்குள் சென்று பார்க்க அவருக்கு மிகுந்த ஆவல் ஏற்பட்டது. வாசலில் அமர்ந்திருந்த காவலாளரிடம் உள்ளே செல்ல அனுமதி கேட்டார். அவரும் சில விதிமுறைகளை சொல்லி அவற்றை கடைபிடிக்குமாறு அவரிடம் சொல்லி அவரை உள்ளே அனுப்பினார்.

தோட்டம், வெளியில் இருந்து பார்த்ததை விடவும் உள்ளே மிகவும் அழகாக இருந்தது. ஏராளமான தென்னை மரங்களும், மாமரங்களும், எலுமிச்சை மரங்களும், சப்போட்டா மரங்களும் இன்னும் எத்தனையோ விதமான மரங்களும் மிகுந்த அழகாய்ப் பராமரிக்கப்பட்டுக்

கொண்டிருந்தன. தேங்காய்கள் பறிக்கப்பட்டு ஒரு மலை போன்ற குவியலாய்க் குவித்து வைக்கப்பட்டிருந்தன. நூற்றுக்கணக்கான கூடைகளில் எலுமிச்சம் பழங்களும், சப்போட்டாக் காய்களும் சேகரிக்கப்பட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்தன. ஒரு இடத்தில் கூடக் குப்பை எதுவும் காணப்படவில்லை. எல்லாவற்றையும் உடனுக்குடன் சுத்தம் செய்ய ஒரு பணியாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

பணக்காரருக்கு அந்த நேர்த்தியான நிர்வாகம் மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஒவ்வொருவரும் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தார்கள். இடை இடையே அவர்களுக்கு வேண்டிய தண்ணீர், தேனீர் எல்லாம் வந்து கொண்டிருந்தன. அந்த சமயங்களில் தொழிலாளர்கள் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அவற்றைப் பருகினார்கள். அதுவும் சில நிமிடங்கள் மட்டுமே எடுத்துக்கொண்டு மீண்டும் உற்சாகமாய் வேலையைத் துவங்கினார்கள். ஆனாலும் அதில் ஒரு பணியாளர் மட்டும் அந்த இடைவெளியில்கூட நின்றவண்ணமாகவே பருகிவிட்டு வேலையைப் பார்த்துக்கொண்டு இருந்தார். அதுமட்டுமல்லாமல் மற்றவர்களைவிட அதிகமான வேலைகளை விரைவாக செய்துகொண்டிருந்தார். இந்தத் தொழிலாளியின் செயல் அவரை மிகவும் கவர்ந்துவிட்டது.

சுறுசுறுப்பாய் வேலை செய்துகொண்டிருக்கும்போது அந்த பணியாளரின் காலில் ஒரு கல் இடித்துக் கட்டைவிரலில் காயம் பட்டுவிட்டது. அதையும் பொருட்படுத்தாமல் கொஞ்சம் மண்ணை எடுத்து காயத்தின்மேல் பூசிவிட்டு எதுவுமே நடக்காததுபோல் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார். பணக்காரன் நெகிழ்ந்துபோனார். அந்த தொழிலாளியை ஓடிப்போய்க் கட்டி அணைத்துக்கொண்டு சொன்னார் “நான் இப்படி கேட்பது தவறுதான் இருந்தாலும் கேட்கிறேன் என்னோடு வந்துவிடுகிறாயா? உனக்கு இங்கு கிடைப்பதைவிட இருமடங்கு சம்பளம் தருகிறேன்; உன்னைப்போல ஒரு கடுமையான உழைப்பாளி என்னோடிருந்தால் என்னுடைய செல்வம் பலமடங்காகிவிடும்”.

தொழிலாளி சொன்னார் “ஐயா நீங்கள் இவ்வளவு அன்போடு கூப்பிடும்போது எனக்கும் உங்களிடம் வேலைக்கு சேர்ந்துவிட ஆசைதான். இருந்தாலும் வரமுடியாத சூழ்நிலையில் இருக்கிறேன்”. பணக்காரர் விடவில்லை “நான் உன்னுடைய முதலாளியிடம் வேண்டுமானால் பேசிப்பார்க்கிறேன், நீ கண்டிப்பாய் என்னோடு வரவேண்டும்” என்றார். தொழிலாளி சிரித்துக் கொண்டே சொன்னார் “ஐயா அந்த முதலாளி நான்தான்”, பணக்காரருக்கு தூக்கிவாரிப்

போட்டது. இவ்வளவு பெரிய செல்வந்தராக இருந்தும் எதற்காக இப்படி ஒரு அடிமை மாதிரி வேலை செய்கிறீர்கள்? என்றார்.

ஐயா, நான் எப்போதுமே இதைச் செய், அதை செய் என்று மற்றவர்களை வேலை வாங்குகிற ரகம் அல்ல. அவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை நானே உழைத்துக் காட்டி விடுகிறேன். அவர்களும் அதை அப்படியே கடைப்பிடிக்கிறார்கள் என்றார். பணக்காரர் சந்தோஷமாக அந்த இடத்தைவிட்டு சென்றார்.

செல்லமே! நம்முடைய இரட்சகர் இயேசு கிறிஸ்துவும்கூட இப்படித்தான். நாம் எப்படியெல்லாம் வாழவேண்டும், எந்த குணாதிசயங்களை வெளிப்படுத்தவேண்டும் என்று தம்முடைய வாழ்க்கையினாலே நமக்கு போதித்திருக்கிறார். ராஜாதி ராஜன் நமக்காக ஒரு அடிமையைப்போல தாழ்மைப்பட்டார். அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்வோம்.

“இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்காக மாதிரியை பின்வைத்துப்போனார்” (1பேதுரு 2:21).

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## என்னக் கொடுப்பேன் என் இயேசுவுக்கு

**“உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்” – ரோமர் 8:35**




யூத சிறுமி ஒருத்தி, ஒரு கிறிஸ்தவக் கூட்டத்திற்கு சென்று இரட்சிக்கப்பட்டாள். தான் பெற்ற இரட்சிப்பின் சந்தோஷத்தை அடக்கமுடியாமல் தன் பெற்றோருக்கும் வந்து சொன்னாள். தகப்பனின் முகம் கொடூரமானது. கோபத்தை கொப்பளித்து, கிறிஸ்துவை மறுதலிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டாள். அவளோ தனது விசுவாசத்தில் உறுதியாயிருந்தாள். இதைக் கண்டு சகிக்கமுடியாத வைராக்கியமான யூத தகப்பன் தன் மகளை இரத்தம் வடியுமளவிற்கு அடித்தான். அவள் ஆடைகள் இரத்தத்தால் கறையானது. காயத்தின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டாள். ஒருநாள் தன் தாயை அழைத்தாள். தான் அடிபட்டபோது அணிந்திருந்த ஆடையையும், ஒரு கத்தரிக்கோலையும் எடுத்துத் தரும்படி கேட்டுக்கொண்டாள். இது எதற்கு மகளே, என்று தாய் கேட்டபோது, ‘அம்மா என் ஆடையில் இரத்த கறைப்பட்ட

இடத்தை வெட்டி எடுத்துக்கொண்டு அதை ஆண்டவரிடம் கொடுத்து, நானும் உமக்காக இரத்தம் சிந்தினேன்' என்பேன் என்று புன்னகையோடு சொல்லி தன் கண்களை மூடினாள்.

நண்பர்களே! கிறிஸ்துவுக்காக நாம் எதை இழந்துள்ளோம்? என்ன தியாகம் செய்துள்ளோம்? அப்படியே நாம் செய்த சிறு சிறு தியாக செயல்களையும் பிறர் பார்த்து மெச்சவேண்டும் என்று எண்ணுகிறோமா? அல்லது இந்த சிறு பிள்ளையைப்போல இயேசுவிடம் காட்டுவேன் என்ற கபடற்ற எண்ணம் நம்மிடம் உண்டா?

பொதுவாகவே கிறிஸ்து நமக்காக பெரிய அற்புதமான, அதிசயமான காரியங்களை செய்து கொண்டேயிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அதே வேளையில் கிறிஸ்துவுக்காக நம் திராணியை மிஞ்சி பெரிய காரியங்களை செய்ய முற்படுவதில்லை. நம்முடைய ஒரு பிள்ளையை கிறிஸ்துவின் பணிக்கென மனப்பூர்வமாய் அர்ப்பணிக்கிறோமா? இந்த விஷயத்தில் உறவினர்கள் சுற்றியுள்ளோரின் ஏளன பார்வையை கிறிஸ்துவினிமித்தம் மேன்மையாக எண்ணும் மனநிலை நம்மிடம் உண்டா? கிறிஸ்துவின் பணிக்காக தசம பாகத்தை மட்டும் கணக்கு பார்த்து கொடுக்கிறோமா? அல்லது கணக்கற்ற அன்பை நம்மேல் பொழிந்தவருக்கு திராணிக்கு மிஞ்சியும் தியாகமாய் கொடுக்கிறோமா? நமது மனநிலை எப்படியிருக்கிறது என்று சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு கட்டம் போட்டுக்கொண்டு அதற்குள் வாழும் கிறிஸ்த வாழ்வை விட்டுவிடுவோம். திராணிக்கு மிஞ்சி 'தியாகம்' என்ற வார்த்தைகளை நம் வாழ்வில் அப்பியாசிப்போம். நம் மனதின் எல்லைக்கோட்டைத் தாண்டி, சமூகத்தால் பாவி என்று புறக்கணிக்கப்பட்டவர்களை நேசிப்போம். அத்தியாவசிய தேவை ஒன்றைக் குறைத்து, அந்தப் பணத்தை தேவனுக்குக் கொடுப்போம். பெலவீனத்தைப் பொருட்படுத்தாமல், மனரம்மியமாய் ஊழியத்தைச் செய்வோம்.

கிறிஸ்துவுக்காக தியாகம் செய்ய தயங்கவேண்டாம். நமக்காக தன் உயிரையே கொடுத்த அவருக்காக நாம் என்ன செய்யப்போகிறோம்? தியாகமற்ற ஒரு சாதாரணமான கிறிஸ்தவ வாழ்வை நாம் வாழ்ந்து முடிக்கவேண்டாம். கிறிஸ்துவின் மேலுள்ள அன்பினால் நம்மை சுட்டெரிக்கப்படவும், ஒப்புக்கொடுக்கும் ஒரு அசாதாரண வாழ்வுக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம். ஆமென்!

என்னக் கொடுப்பேன் என் இயேசுவுக்கு
என் வாழ்வில் செய்த நன்மை ஏராளமே
ஏராளம் ஏராளம் ஏராளமே
என் வாழ்வில் செய்த நன்மை ஏராளமே
நன்றி நன்றி நன்றி ராஜா
நன்றி நன்றி அப்பா!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ சாமுவேல் சுவேமர்

### அறிந்ததைக் கூறுங்கள்



**மண்ணில்** : 12-04-1867
**விண்ணில்** : 02-04-1952
**ஊர்** : **விர்ஸ்லேண்ட், மிக்சிகன்**
**நாடு** : **அமெரிக்கா**
**தரிசன பூமி** : **அரேபியா**

இஸ்லாமியர்களின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட சாமுவேல் சுவேமேர் 1867-ம் ஆண்டு பிறந்தார். கிறிஸ்தவ முறைப்படி வளர்ந்த இவர் சிறுவயதிலேயே மிஷனெரி தாகம் உடையவராகக் காணப்பட்டார். இவரது சகோதரி நெல்லி சுவேமேர் என்பவர் 40 வருடங்கள் சீனா தேசத்தில் மிஷனெரியாக பணிசெய்தவர்.

கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக்கொண்டிருந்தபோது ராபர்ட் வில்டர் என்ற மிஷனெரியின் சவாலான செய்தியினால் தொடப்பட்டார். தன்னை ஆண்டவர் மிஷனெரிப் பணிக்காக அழைப்பதை உணர்ந்தார். எனவே, அரேபிய உலகிற்கு செல்ல தீர்மானம் செய்தார். ஆனால், இவரை பொருளுதவி செய்து தாங்கவும், உற்சாகப்படுத்தவும் எவரும் முன்வரவில்லை.

சுவேமர் தன் நண்பர் ஜேம்ஸ் கேண்டினுடன் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தார். இருவரும் ஒரே தரிசனம் உடையர்களாக ஒற்றுமையாக செயல்பட ஆரம்பித்தனர். ‘அரேபியன் மிஷன்’ என்ற இயக்கத்தை ஆரம்பித்து, அதற்கான உதவிகளை பலரிடமிருந்தும் கேட்டுப் பெற்றுக்கொண்டனர். தங்களின் மிஷனெரி பயணத்திற்கான உதவிகள் அனைத்தும் கிடைத்தவுடன், 1869-ல் இருவரும் அரபியாவிற்கு மிஷனெரியாக சென்றனர்.

சாமுவேல் சுவேமர் பாரசீக வளைகுடா பகுதியில் தன் பணிகளை ஆரம்பித்தார். தெருக்களில் நின்றும், பொதுக்கூட்டங்கள் கூட்டியும், வீடு வீடாக சென்றும் மக்களை கிறிஸ்துவிடம் வழிநடத்தினார்.

ஊழியப்பாதையில் வரும் இன்னல்களோ ஏராளம். 1904-ம் ஆண்டு ஸ்வேமர் 4 மற்றும் 7 வயதான தன் இரு சிறுமகள்களையும் மரிக்கக் கொடுத்தார். வேதனையிலும் முன்வைத்த காலை பின்வைக்காமல் உறுதியுடன் பணிபுரிந்தார். 1912-ம் ஆண்டு அனைத்து இஸ்லாமிய ஊழியங்களை வழிநடத்தும் பொறுப்பைப் பெற்றார். 17 வருடங்களாக கெய்ரோவை மையமாக வைத்து உலகின் பல பாகங்களுக்கும் சென்று இஸ்லாமியர்களை இயேசுவுக்குள் நடத்திய இவர் மகத்தான தேவ மனிதர்.


அன்பரே! உங்கள் மூலம் எவ்வித மக்கள் கிறிஸ்துவைக் கண்டுக்கொள்ள போகிறார்கள்?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : கர்த்தருடைய வேலையைச் செய்யும்போது, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே நமது இலக்காயிருக்க வேண்டும்.

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! உம்மைக் குறித்து என் அயலகத்தாருக்கு எடுத்துரைக்க இன்றே புறப்படுகிறேன்.

**தியானத்திற்கு : எண். 16, நீதி. 12, கலாத்தியர் 1-2**

## ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை




இறை இயேசுவில் பிரியமானவர்களே!

ஆண்கள் சங்கம் சார்பில் வாழ்த்துக்கள். நமது சபை ஆராதனைகள் நடைபெறாத சூழலில் ஆண்கள் சங்கம் நடைபெற வேண்டிய நாளில் வாட்சப் செயலி மூலம் ஜெபத்தில் இணைந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் தொடர்ந்து நமது குடும்பங்களுக்காகவும், திருச்சபைக்காகவும், தேசத்திற்காகவும் பாரத்தோடு ஜெபிப்போம். வெகு விரைவாக ஆலயத்தின் கதவுகள் திறக்கப்படவும், மக்கள் பயமின்றி தங்கள் கடமைகளைச் செய்து நிறைவேற்றவும் பாரத்தோடு ஜெபித்துக்கொள்வோம்.

தொடர்ந்து ஆண்டவர்தாமே நம்மை வழிநடத்துவாராக!

**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**
**திரு. சைலஸ்**

## பெண்கள் ஐக்கிய சங்க அறிவிப்பு




இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

நமது இந்திய தேசத்தில் நிலமைகள் சீரடையவும், ஓமான் தேசம் கொடிய வியாதியிலிருந்து காக்கப்படவும், அகில உலக பாதுகாப்புக்காகவும் ஜெபித்துக்கொள்வோம்.

நமது சபை மக்களை நினைவுகூர்ந்து ஜெபித்துக்கொள்வோம். உடல் நலத்திற்காகவும், உணவுக்காகவும், உறவுகளைத் தேடியும் அங்கலாய்ப்போடு இருக்கும் மக்கள் இறை அரவணைப்பையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள நமது பெண்கள் ஐக்கிய சங்கமாக ஜெபித்துக்கொள்வோம்.

வரும் நாட்களில் ஆலயத்தில் நாம் இணைந்து ஜெபத்தைத் தொடர ஆண்டவர்தாமே ஆசீர்வாதம் அருளி ஆதரித்து வழிநடத்துவாராக.

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 84

### ஏப்ரல் 2020 மாத கேள்விகள்
### (சங்கீதம் 104 - 113 வரை)

1. யார் ஒடுங்கிப் போகிறார்கள்?
2. நித்திய கீர்த்தியுள்ளவன் யார்?
3. கொக்குகளின் குடியிருப்பு எது?
4. உபவாசத்தினால் எது தளர்ச்சியடைகிறது?
5. யாருடைய இருதயம் மகிழும்?
6. கர்த்தர் யாரை புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்?
7. எது தன் வாயை மூடும்?
8. யாருக்கு நற்புத்தியுண்டு?
9. தலையின் பெலன் எது?
10. எதை புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள்?

11. எது உள்ளத்தில் தண்ணீரைப்போல் பாயும்?
12. கர்த்தர் யாரை அக்கினிஜீவாலைகளாக செய்கிறார்?
13. யாருடைய வம்சம் ஆசீர்வதிக்கப்படும்?
14. சிறையாக விற்கப்பட்டவன் யார்?
15. கிலேசத்தினால் கரைந்துபோகிறது எது?
16. கர்த்தர் சீயோனிலிருந்து எதை அனுப்புவார்?
17. கர்த்தர் யாருக்கு ஆகாரம் கொடுத்தார்?
18. காமின் தேசத்திலே பரதேசியாய் இருந்தது யார்?
19. கர்த்தர் எதை உடைத்தார்?
20. இரத்தத்தால் தீட்டுப்பட்டது எது?

## மார்ச் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கேரூபீன்கள் - சங். 99:1
2. இருதயம் - சங். 102:4
3. அக்கிரமக்காரர் - சங். 94:4
4. உண்மை (கர்த்தருடைய உண்மை) – சங். 100:5
5. அக்கினி – சங். 97:3
6. பூமியின் ஆழங்கள் - சங். 95:4
7. அவருக்கு (கர்த்தருக்கு) பயந்தவர்கள்மேல் (சங். 103:7)
8. மகிமையும், கனமும் - சங். 96:6
9. தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் - சங். 101:8
10. பூமியின் எல்லைகளெல்லாம் - சங். 98:3
11. ஆந்தை – சங். 102:6
12. காட்டு விருட்சங்கள் - சங். 96:12
13. ராஜாவின் வல்லமை – சங். 99:4
14. ஆறுகள் - சங். 98:8
15. ஆத்துமா – சங். 94:17
16. அவருடைய (கர்த்தருடைய) ராஜரிகம் - சங். 103:19
17. இருதயத்தை – சங். 95:8
18. திக்கற்றவர்களுடைய – சங். 102:16
19. நீதிமானுக்காக – சங். 97:11
20. மாறுபாடான இருதயம் - சங். 101:4

## மார்ச் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Juslin Jaslin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Ancy Daniel | Mrs. Leela Gladson | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Ashika Joel | Mrs. Manju Martin | Mrs. Shiney Johan |
| Mrs. Aspin Bejo | Mrs. Nisha Rajan | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Percy Jean | Mrs. Synthia Srinivas |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Thamari Johnson |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Regin Justa Vinolin | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Sapthekha Jerry Sathya | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Sarah Rajasingh | |

## ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 69

### ஏப்ரல் 2020 மாத கேள்விகள்
### (எஸ்தர் 1-10)

1. சூசான் அரண்மனையில் எஸ்தர் யாரிடம் தப்புவிக்கப்பட்டாள்?
2. தூக்குமரத்தைச் செய்வித்தது யார்?
3. யாருடைய கீர்த்தி எல்லா நாடுகளிலும் பிரசித்தமாயிற்று?
4. அகாஸ்வேரு ராஜா எங்கு விருந்து செய்வித்தான்?
5. எஸ்தரின் பணிவிடைக்கென்று ராஜாவினால் நியமிக்கப்பட்ட பிரதானிகளில் ஒருவன் யார்?
6. ஆமானின் வீடு யாருக்கு கொடுக்கப்பட்டது?
7. ராஜாவாகிய அகாஸ்வேருக்கு இரண்டாவதானவன் யார்?
8. எஸ்தர் யாருடைய குமாரத்தி?
9. எஸ்தர் எந்த மாதம் ராஜாவினிடத்தில் அழைத்துக்கொண்டுப் போகப்பட்டாள்?
10. ஆமான் தன் பிராணனுக்காக யாரிடம் விண்ணப்பம் பண்ண எழுந்த நின்றான்?
11. அகாஸ்வேருவின் அரண்மனையில் ஸ்திரீகளுக்கு விருந்து செய்தது யார்?
12. எந்த நகரம் கலங்கிற்று?
13. தூக்குமரம் எங்கு நாட்டப்பட்டிருந்தது?

14. ராஜாவின் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருந்தது யார்?
15. ராஜாவின் உத்தரவினால் தீவிரமாய் புறப்பட்டுப் போனவர்கள் யார்?
16. அலங்கமில்லாத ஊர்களில் குடியிருக்கிற நாட்டுப்புறத்தார் யார்?
17. எஸ்தர் செய்த விருந்துக்கு வந்தவர்கள் யார்?
18. சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக்கொண்டு தன் வீட்டுக்குத் தீவிரித்துப்போனது யார்?
19. எஸ்தர் யாரை ஆமானின் அரண்மனைக்கு அதிகாரியாக வைத்தாள்?
20. ஆமானின் குமாரர்கள் எத்தனை பேர்?

## மார்ச் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. 52 நாளைக்குள்ளே – நெகே. 6:15
2. அர்தசஷ்டா ராஜாவிடம் - நெகே. 2:1-5
3. ஒரு நரி – நெகே. 4:3
4. அவர்களுக்கு அறிவை உணர்த்த – நெகே. 9:20
5. மல்கியா – நெகே. 3:14
6. ஒரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா – நெகே. 2:10
7. செமாயா – நெகே. 6:10
8. யெசுவா – நெகே. 10:9
9. எருசலேம் அலங்கத்தின் வாசல் - நெகே. 1:3
10. பிலேயாமை – நெகே. 13:1
11. நெகேமியா – நெகே. 8:9
12. அனனியா - நெகே. 7:2
13. ஏழாம் வருஷம் - நெகே. 10:31
14. எலியாசிப் தொபியா – நெகே. 13:4
15. ஆசாப் - நெகே. 2:8
16. பிள்ளைகளை – நெகே. 9:23
17. ஓனோ – நெகே. 6:2
18. பன்னிரெண்டு வருஷகாலம் - நெகே. 5:14
19. மத்தனியா – நெகே. 11:17
20. எஸ்றா – நெகே. 8:1,2

## மார்ச் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jean C. R. Shibin | Mr. Lenin Raj |
| Mr. Anshio Shajin | Mr. Jino John | Mr. Rajan V. N. |
| Mr. Austin Daniel Raj | Mr. Johan Pratheep | Mr. Ramesh R. |
| Mr. Bejo Nelson | Mr. Justus Martin | Mr. Robin Devadhas |
| Mr. Daniel Raj P. | Mr. Kanagavel | Mr. Srinivas |
| Mr. Jaslin Sundara Kumar | | |

## *May God Bless All*

## Birthday Celebrants – April 2020

| | |
|---|---|
| 04th April | Mr. Nickson, S/o Mr. David Sundar Sing |
| 04th April | Mrs. Selva Angel, W/o Mr. Mohan Babu |
| 04th April | Mr. Dhinakaran |
| 05th April | Mrs. M. Latha, W/o Mr. George |
| 05th April | Miss. Ancio Broos, D/o Mr. Jegan Broose |
| 07th April | Mr. T. Raju |
| 08th April | Master. Daulton Ziegan Isaac, S/o Mr. Isaac Solomon |
| 09th April | Mr. P. Bino Vetha Raja Singh |
| 10th April | Mrs. Eunice Beulah Suganthi, W/o Mr. Isaac Solomon |
| 10th April | Mrs. Jancy Deepa, W/o Mr. Victor Johnslin |
| 10th April | Mr. M. Ramesh |
| 11th April | Master. Joshua, S/o Mr. T. Raju |
| 11th April | Mrs. Vijayakumari, W/o Mr. Devaraj |
| 11th April | Miss. Anlin Mathney, D/o Mr. Anto Kingston |
| 11th April | Mr. M. Berkins |
| 12th April | Mrs. K. Felicia Daisy, W/o Mr. Y. John Yesu Lordson |
| 12th April | Mr. Prem Vijins Gabriel |
| 12th April | Mrs. Reni Thresia, W/o Mr. C. A. Vinu |
| 13th April | Mr. Mayshack |
| 13th April | Mrs. Sabitha, W/o Mr. Jebastin |
| 13th April | Mr. J. Selvamani |
| 14th April | Miss. Jeena Jones, D/o Mr. Jones |
| 14th April | Master. Kevin John, S/o Mr. A. Rajasingh |

| | |
|---|---|
| 14th April | Mr. Ashok Rajasekaran |
| 17th April | Mr. Livingston |
| 18th April | Mr. C.A. vinu |
| 18th April | Mr. Michael |
| 19th April | Master. Danny J Sathya, S/o Mr. Jerry Sathya |
| 19th April | Mr. S. Siva Kumar |
| 20th April | Mrs. Sobiya Kumari, W/o Mr. Venil Singh |
| 21st April | Mrs. Felsi Rani, W/o Mr. John Jacob |
| 23rd April | Mrs. Gracelin Rani, W/o Mr. Bensam |
| 23rd April | Mrs. Paulin Shabila, W/o Mr. Gnanadhas |
| 23rd April | Master. V. J. Jalin Lino, D/o Mr. Victor Johnslin |
| 24th April | Mr. Nelson |
| 25th April | Master. Priston David, S/o Mr. David Prabhakaran |
| 25th April | Miss. V.J. Shaolin Lina D/o Mr. Victor Johnslin |
| 26th April | Mr. R. Sunil |
| 26th April | Master A. Garisht Ruhan S/o Atheesh Joy |
| 27th April | Miss. Arifny Cratford Jenkin, D/o Mr. Jenkin Raj |
| 30th April | Mrs. Shakina, W/o Mr. Prem Vijins |
| 30th April | Mrs. Bindhu, W/o Mr. Robertdhas |

## Wedding day Anniversaries – April 2020

| | |
|---|---|
| 02nd April | Mr. Broosewelt & Mrs. Nisha |
| 03rd April | Mr. Jose Chandra Bose & Mrs. Jeya Selvi |
| 06th April | Mr. C. Stalin & Mrs. Sheeba |
| 06th April | Mr. C.A. Vinu & Mrs. Reni Thresia |
| 13th April | Mr. Mohan Babu & Mrs. Selva Angel |
| 16th April | Mr. Prem Meshach & Mrs. Shiney Vasica |
| 22nd April | Mr. J. Gnanadhas & Mrs. Paulin Shabila |

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் Mr. Ramesh அவர்களின் தாயார் Mrs. Dana Pakiyam அவர்கள் மார்ச் மாதம் 24-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

**குடும்பங்களுக்காக ஜெபிக்க:-**

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.

- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......

8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. 200-க்கும் அதிகமான நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லா நாடுகளும் பாதுகாக்கப்படவும்.....
10. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....
11. குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – ஏப்ரல் 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 1 | புதன் | 1கொரி. 1:18-31 | 1கொரி. 1:18 | 2சாமு. 14-15 |
| ஏப்ரல் 2 | வியாழன் | எபேசி. 2:1-18 | எபேசி. 2:7 | 2சாமு. 16-18 |
| **ஏப்ரல் 3** | **வெள்ளி** | **கொலோ. 1:24-29** | **கொலோ. 1:27** | **2சாமு. 19:20** |
| ஏப்ரல் 4 | சனி | 1கொரி. 1:1-9 | 1கொரி. 1:2 | 2சாமு. 21-22 |
| ஏப்ரல் 5 | ஞாயிறு | மாற்கு 11:1-11 | மாற்கு 11:9 | 2சாமு. 23-24 |
| ஏப்ரல் **6** | திங்கள் | மத். 21:18-22 | மத். 21:22 | 1இரா. 1-2 |
| ஏப்ரல் 7 | செவ்வாய் | மாற். 12:13-17 | மாற். 12:17 | 1இரா. 3-5 |
| ஏப்ரல் 8 | புதன் | மாற்கு 14:1-19 | மாற். 14:9 | 1இரா. 6-7 |
| ஏப்ரல் 9 | வியாழன் | யோ. 6:47-58 | யோ. 6:48 | 1இரா. 8-9 |
| **ஏப்ரல் 10** | **வெள்ளி** | **ஏசா. 53:1-12** | **ஏசா. 53:6** | **1இரா. 10-12** |
| ஏப்ரல் 11 | சனி | 1பேது. 4:12-19 | 1பேது. 4:13 | 1இரா. 13-15 |
| ஏப்ரல் 12 | ஞாயிறு | யோ. 20:1-18 | யோ. 20:15 | 1இரா. 16-18 |
| ஏப்ரல் **13** | திங்கள் | கொலோ. 3:1-4 | கொலோ. 3:1 | 1இரா. 19-20 |
| ஏப்ரல் 14 | செவ்வாய் | 1கொரி. 6:14-20 | 1கொரி. 6:15 | 1இரா. 21-22 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 15 | புதன் | ரோமர் 6:1-15 | ரோமர் 6:5 | 2இரா. 1-3 |
| ஏப்ரல் 16 | வியாழன் | 1கொரி. 15:51-58 | 1கொரி. 15:57 | 2இரா. 4:5 |
| **ஏப்ரல் 17** | **வெள்ளி** | **1கொரி. 15:12-26** | **1கொரி. 15:4** | **2இரா. 6:8** |
| ஏப்ரல் 18 | சனி | எசேக். 37:1-10 | எசேக். 37:5 | 2இரா. 9:11 |
| ஏப்ரல் 19 | ஞாயிறு | யோ. 20:24-29 | யோ. 20:28 | 2இரா. 12:14 |
| ஏப்ரல் **20** | திங்கள் | மத். 16:13-20 | மத். 16:16 | 2இரா. 15:17 |
| ஏப்ரல் 21 | செவ்வாய் | அப். 4:5-13 | அப். 4:12 | 2இரா. 18:20 |
| ஏப்ரல் 22 | புதன் | அப். 3:1-16 | அப். 3:15 | 2இரா. 21-23 |
| ஏப்ரல் 23 | வியாழன் | யோ. 1:29-37 | யோ. 1:36 | 2இரா. 24-25 |
| **ஏப்ரல் 24** | **வெள்ளி** | **1பேதுரு 2:1-9** | **1பேதுரு 2:5** | **1நாளா. 1-2** |
| ஏப்ரல் 25 | சனி | பிலிப். 2:5-11 | பிலிப். 2:11 | 1நாளா. 3:5 |
| ஏப்ரல் 26 | ஞாயிறு | யோ. 6:48-57 | யோ. 6:48 | 1நாளா. 6:7 |
| ஏப்ரல் **27** | திங்கள் | எபிரெ. 13:1-3 | எபிரெ. 13:3 | 1நாளா. 8:10 |
| ஏப்ரல் 28 | செவ்வாய் | லூக். 5:29-32 | லூக். 5:32 | 1நாளா. 11-13 |
| ஏப்ரல் 29 | புதன் | யோ. 2:1-11 | யோ. 2:8 | 1நாளா. 14-16 |
| ஏப்ரல் 30 | வியாழன் | மத். 8:5-13 | மத். 8:11 | 1நாளா. 17-20 |
| **மே 1** | **வெள்ளி** | **லூக். 15:11-32** | **லூக். 15:23** | **1நாளா. 21-23** |

# வாழ்த்துகிறோம்!

ஒன்பது ஆண்டுகளை சிறப்பாக நிறைவு செய்து பத்தாம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் **“பாலைவன மன்னா”** தொடர்ந்து சிறப்புடன் வெளிவர வாழ்த்துகிறோம்!

# நன்றி!!

**பாலைவன மன்னா**–விற்கு தங்கள் படைப்புகளையும் உதவிகளையும் தந்தவர்களுக்கும் மற்றும் வாசகர்களுக்கும் திருச்சபையின் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்!

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**